www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

V10SS

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2024

## வகுப்பு - 10

## சமூக அறிவியல்

கால அளவு: 3.00 மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **14×1=14**

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
   அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா
2. லத்தீன் அமெரிக்காவுடன் 'அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைபிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?
   அ) பிராங்ளின் D. ரூஸ்வெல்ட் ஆ) ட்ருமன்
   இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்
3. மாகாண தன்னாட்சியை அறிமுகம் செய்த சட்டம் எது?
   அ) 1858 ஆம் ஆண்டு சட்டம் ஆ) இந்திய கவுன்சில் சட்டம் 1909
   இ) இந்திய அரசுச் சட்டம் 1919 ஈ) இந்திய அரசுச் சட்டம் 1935
4. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார்?
   அ) தாதாபாய் நௌரோஜி ஆ) நீதிபதி கோவிந்த ரானடே
   இ) பிபின் சந்திரபால் ஈ) ரொமேஷ் சந்திரா
5. அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய ____________ நீதிக் கட்சியால் நிறுவப்பெற்றது.
   அ) பணியாளர் தேர்வு வாரியம் ஆ) பொதுப்பணி ஆணையம்
   இ) மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம் ஈ) பணியாளர் தேர்வாணையம்
6. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்
   அ) 2500 கி.மீ ஆ) 2933 கி.மீ இ) 3214 கி.மீ ஈ) 2814 கி.மீ
7. இந்தியாவின் காலநிலை ____________ ஆகப் பெயரிடப்பட்டுள்ளது.
   அ) அயனமண்டல ஈரக் காலநிலை
   ஆ) நிலநடுக்கோட்டுக் காலநிலை
   இ) அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை
   ஈ) மிதஅயனமண்டலக் காலநிலை
8. சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு, கருவாக இருப்பது
   அ) போக்குவரத்து ஆ) கனிமப்படிவுகள் இ) பெரும்தேவை ஈ) மின்சக்தி கிடைப்பது
9. இந்தியாவில் தங்கநாற்கரச் சாலையின் நீளம்
   அ) 5846 கி.மீ ஆ) 5942 கி.மீ இ) 5630 கி.மீ ஈ) 5800 கி.மீ
10. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் ____________.
    அ) தர்மபுரி ஆ) வேலூர் இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு
11. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது.
    அ) ஒரு முறை ஆ) இரு முறை இ) மூன்று முறை ஈ) எப்பொழுதும் இல்லை
12. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்ற அமைப்பு பெற்றவர்
    அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்
    இ) மாநில அரசாங்கம் ஈ) நாடாளுமன்றம்
13. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக் கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?
    அ) சட்டப்பிரிவு 50 ஆ) சட்டப்பிரிவு 51 இ) சட்டப்பிரிவு 52 ஈ) சட்டப்பிரிவு 53
14. ____________ என்பது உடல் நலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல்முறையாகும்.
    அ) ஆரோக்கியம் ஆ) ஊட்டச்சத்து இ) சுகாதாரம் ஈ) பாதுகாப்பு

### பகுதி - II

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 28க்கு கட்டாயமாக விடையளி.** **10×2=20**

15. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.
16. 'டாலர் ஏகாதிபத்தியம்' தெளிவுபட விளக்குக.
17. முத்து துறைமுக நிகழ்வை விவரி.
18. [illegible] ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

19. சைமன் குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?

www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

20. இந்தியத் திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறு.
21. இந்தியாவில் உள்ள உயிர்க்கோளக் காப்பகங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.
22. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.
23. பேரிடர் அபாய நேர்வு குறைப்பு வரையறு.
24. தமிழ்நாட்டின் வேளாண் பருவங்களை குறிப்பிடு.
25. நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.
26. வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன?
27. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம் பற்றி நீவீர் அறிவது யாது?
28. தமிழ்நாட்டில் செயல்படும் முக்கியமான திட்டங்கள் யாவை?

## பகுதி - III

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **10×5=50**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   i) பாரீஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ________ ஆவார்.
   ii) போயர்கள் ________ என்றும் அழைக்கப்பட்டனர்.
   iii) சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது ________.
   iv) இந்தியா, தென்கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான ஒரு நுழைவு வாயிலாக ________ இருக்கிறது.
   v) ________ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
30. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு செயல்பாடுகளை ஆய்வு செய்க.
31. கிழக்கிந்தியக் கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
32. அ) வேறுபடுத்துக.
   i) வடகிழக்குப் பருவக்காற்று மற்றும் தென்மேற்குப் பருவக்காற்று
   ii) சணல் மற்றும் சர்க்கரை ஆலைகள்

   ஆ) காரணம் கூறுக.
   வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.
33. இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை விவரி.
34. புயலுக்கு முன்னரும் பின்னரும் மேற்கொள்ள வேண்டிய அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகளை எழுதுக.
35. அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
36. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
37. தமிழ்நாட்டில் நெசவுத் தொழில் தொகுப்பு பற்றி எழுதுக.
38. பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளைக் கூறு.
39. இந்தியாவில் GDPயில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.
40. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.
41. 1910 முதல் 1930 வரையிலான ஆண்டுக்குட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42. **உலக வரைபடத்தில்** கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
   i) பிரேசில் ii) துருக்கி iii) போலந்து iv) ஜப்பான் v) பிரான்ஸ்

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×8=16**

43. இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு, ராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினைத் திறனாய்வு செய்க.

   **(அல்லது)**

   தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு போக்குவரத்து முறைகளை விளக்குக.
44. கொடுக்கப்பட்டுள்ள **இந்திய வரைபடத்தில்** கீழ்க்காணும் குறிக்கவும் இடங்களைக் குறிக்கவும்.
   i) ஆரவல்லி ii) காரகோரம் iii) பாமீர் முடிச்சு iv) லட்சத்தீவுகள்
   v) ஹிராகுட் அணை vi) கொச்சின் vii) காவிரி டெல்டா viii) ஜாம்ஷெட்பூர்

   **(அல்லது)**

   **தமிழ்நாடு வரைபடத்தில்** கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
   i) விமானம் நிலையம் (ஏதாவது ஒன்று) ii) தொட்டபெட்டா iii) மன்னார் வளைகுடா
   iv) [illegible] v) சோழமண்டல கடற்கரை
   vi) வைகை ஆறு vii) கன்னியாகுமரி viii) பழவேற்காடு ஏரி

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

----------